ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பிரமாதீச
சித்திரை

மே
1973

தொகுதி 35
பகுதி 5

Vol. 35
No. 5

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

ஔஷத உற்பத்தித் துறையினர் முன்னுள்ள பிரச்னைகள் ... 81

அக்னி மாந்தியமும் அஜீர்ணமும் ... 84

வாந்தியை நிறுத்தும் சில மருந்துகளும் உணவுகளும் ... 86

குப்தயோகங்கள் ... 90

புற்றுநோய் ... 92

கார்யாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில் நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5-50
— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M|s. Kalia Brothers (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA

Phone: **Office - 3232**
Resi - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: KALIA

போன்: ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "   P, B. No. 1382.   போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி
(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்

எங்களுடைய கிளைகள் :

1.	23-B, பூஸா ரோடு, புது டில்லி-5	போன் : 585687
2.	மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,, 2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,, 85752
4	வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-16	,, 32336
5.	பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1	,, 92
6	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,, 195
7.	கடைவீதி, பொன்னுனி	,, 41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1.	,, 378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,, 87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு	
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	33758
12.	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,, 4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2	842
14.	No 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னுனி)	31
15.	ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1	

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

தொகுதி 35	பிரமாதீச சித்திரை	பகுதி 5
Vol. 35	1973 மே	No. 5

श्री धन्वन्तरये नमः

ஔஷத உற்பத்தித் துறையினர் முன்னுள்ள பிரச்னைகள்

ஆயுர்வேத ஔஷத உற்பத்தித் துறையில் உள்ளவர்கள் இன்று கடும் சோதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்நூற்றாண்டின் ஆரம்பம்வரை வைத்தியர்கள் தாமே தமக்குவேண்டிய மருந்துகளைத் தயாரித்துக் கொண்டிருந்த நிலை மாறி ஔஷத உற்பத்தித் துறை தனித்து வளர்ந்து, வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகச் சிறந்த முறையில் உதவி வருகின்றது. வளர வளர அது பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட நேர்வது இயற்கையே எனினும் சில அர்த்தமற்றதும், தீங்கு விளைவிப்பதுமான கட்டுப்பாடுகள் ஏற்படும்போது அக்கட்டுப்பாடுகளை அகற்ற முயல்வதும் நியாயமே.

முதலிலே ஒன்று நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறோம். சட்டத்தை வேண்டுமென்றே மீற விரும்புபவனைச் சட்டமே நேரிடையாகத் தடை செய்யாது. நேர்மையான நடத்தையுடனிருக்கச் சட்டம் உதவும். ஆனால் நேர்மையற்ற நடத்தையை இதனால் நேரிடையாகத் தடை செய்யவும் முடியாது. நேர்மையாக வாழ, சமூகத்தின் பண்பாடும் கண்காணிப்பும் உதவுமளவு சட்ட திட்டங்கள் என்றுமே உதவியதில்லை.

மதுவிலக்கு என்ற சுதந்திர பாரதத்தின் முதல் நல்வாழ்வுப் பணியில் ஆஸவாரிஷ்டங்களை மதுவினமாகத் தயாரித்து துருபயோகம் செய்யலாம் என்ற கருத்தின் அடிப்படையில் ஆஸவாரிஷ்டங்களை மதுவிலக்கு அமுலின்கீழ் கட்டுப்படுத்தினர். ஆனால் மதுவினத்தைப்போல் போதைப் பொருளாகச் சிறிதும் பயன் படாத ஆஸவாரிஷ்டங்களைக் கட்டுப்படுத்தி ஆயுர்வேத ஔஷத உற்பத்தித் துறையினருக்கு விளைவித்த சங்கடங்கள் சொல்லில் அடங்கா. இன்று மதுவிலக்கு ரத்தான போதிலும், ஆஸவாஷ்டங்களின் தயாரிப்பிலும் விநியோகத்திலும் கட்டுப்பாடு உள்ளது.

அபினையும் கஞ்சாவையும் கலந்து தயாரித்த மருந்துகளை விநியோகிக்க லைசென்ஸ் முறைகளை நிர்ணயித்த அரசாங்கம் ஆயுர்வேத மருந்து உற்பத்தித் துறையினருக்கும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் பெருத்த அநீதியை விளைவித்தது. இன்று அலோபதி முறைப்படி அந்த இரு சரக்குகள் கொண்ட மருந்துகளை உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களும் மொத்த — சில்லரை வியாபாரிகளும் அவைகளை டாக்டர்களுக்கு விற்பதில் யாதொரு தடையுமில்லை. இவைகளை வைத்துக்கொள்வதற்கென டாக்டர்களுக்கு லைசென்ஸ் தேவை இல்லை. ஆனால் அபின் கஞ்சா கலந்த ஆயுர்வேத மருந்துகளைத் தயார் செய்யும் ஸ்தாபனங்கள் அதை நேரிடையாக வைத்தியர்களுக்கு விற்கமுடியாது. வைத்தியர்கள் அவைகளைப் பெற வேண்டுமானால் லைசென்ஸ் பெறவேண்டும். ஆனால் அந்த வைத்யன் கையெழுத்திட்டுக் கொடுத்த மருந்துச் சீட்டைக் காட்டி நோயாளி அந்த மருந்தைப் பெற முடியும். அவன் லைசென்ஸ் பெறத் தேவையில்லை. நோயாளியை நம்பும் சர்க்கார், வைத்தியனையும் மருந்து உற்பத்தியாளரையும் நம்பவில்லை. இது எத்தனை நேர்மையற்ற சேயல்? வைத்தியர்களிடம் காட்டிய மகத்தான அநீதிஎன்பதை நினைக்க, கட்டுப்பாடுகளுக்கு உட்பட நினைப்பவனுக்குக் கூட நிலை தடுமாறுகிறது.

ஆஸவாரிஷ்டங்கள் என்ற பெயரில் ஒருவன் மதுவினத்தை விற்பானேயாகில் அவனைத் தண்டிக்கப் பொதுச்சட்டம் போதுமானது. பால் பாத்திரத்தில் ஒருவன் கள்ளை வைத்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்று பாலையே கட்டுப்படுத்துவது போல ஆஸவாரிஷ்ட நிர்மாணத்தைக் கட்டுப்படுத்துவதை நியாயமானதாக ஏற்கமுடிவதில்லை.

தங்கக் கட்டுப்பாடு எதை உத்தேசித்து அமுலாக்கப்பட்டதோ அந்த லக்ஷ்யம் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை என மத்திய நிதி மந்திரியே கூறுகிறார். ஆனால் ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியில் அது விளைவித்துள்ள துயரைக் காணும்போது

ஆயுர்வேத மருந்து உற்பத்தித் தடையில் அது வெற்றி கண்டுள்ளது எனக் கூறலாம். லக்ஷக்கணக்கான நோய்களுக்கு மருந்து தயாரிக்கும் ஸ்தாபனம் ஒன்றுக்கு வருஷத்திற்கு 50 கிராம் தங்கம், தடவைக்கு பத்து கிராமாக ஐந்து தடவைகளில் பெற ஒரு அனுமதிச்சீட்டு. ஆனால் ஒவ்வொரு தடவையும் அதை சென்னையிலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா காரியாலயத்தில் ஸ்தாபனத்தின் பிரதான நிர்வாஹி நேரில் சென்று கையொப்பமிட்டு வாங்கி வர வேண்டும். 100 ரூபாய்க்குக் குறைவான பொறுமானமுள்ள தங்கத்தைப் பெற ஒரு பிரதான நிர்வாஹி சென்னைக்குச் சென்று வரவேண்டுமானால் அதனால் ஏற்படும் செலவும் கால விரயமும் எத்தகையது? சுரைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம், 10 கிராம் தங்கத்தைக் கொண்டு, மகரத்துவஜம் போன்ற கடும் உழைப்பும், நேரமும செலவிடவேண்டிய மருந்தைத் தயார் செய்யும்போது வீணாக எத்தனை செலவு? 25 — 50 கிராம் தங்கத்தைக் கொண்டு தயாரிக்கும் மகரத்துவஜத்திற்கும் எரிப்பு அரைப்பு முதலியவைகளில் ஏற்படும் செலவும் நேரமும் ஒரே விதமாகத்தான் இருக்கும். ஆக வகை தெரியாத முறையில் சட்டங்கள் அமுலாக்கப்படும்போது முதலைகள் தப்புவதும் ஒன்றுமறியாத அப்பாவி பலியாவதும் கண்கூடாகத் தெரிகிறது.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

அக்னி மாந்தியமும் அஜீர்ணமும்

சில குறிப்புகள்

வென்னீரைக் குடிப்பது : அக்னி மந்தமாகி, அதற்குக் காரணமாகக் கபமோ வாயுவோ இருப்பின் வென்னீர் சாப்பிடுவதுதான் நல்லது. கபத்தை இளக்கிச் சிறுகச் சிறுக வெளியேற்றும் தன்மை (லேகனம்) வாயுவின் தடங்கலை நீக்கித் தன் வழியே ஸஞ்சரிக்கச் செய்து (அனுலோமனம்), தொண்டை, இரைப்பை முதலியவைகளில் கப அடைப்பால் உணவில் விருப்பமின்மை, இரைப்பை கனப்பது, ஜீரணத் திரவங்கள் சுரக்கும் வழி அடைப்பு முதலியவைகளைப் போக்குவது இவை எல்லாம் வென்னீர் தரும் நன்மைகள். பித்தஜ அக்னிமாந்தியத்தில் ஆறிய வென்னீர்தான் நல்லது.

காபியும் டீயும் : திரவமான பான வகைகளில் ஜலத்திற்கு அடுத்த ஸ்தானம் காப்பிக்கும் டீக்கும் தரலாம். தேகவாகிற்கேற்ப இதிலும் மாறுபாடு உண்டு. உஷ்ணமான பானமானதாலே கபப் பிரகிருதிக்கு அவ்வளவு கெடுதியை இவை விளைவிக்காது. வாதப் பிரகிருதிக்கு, மேலும் வாயு அதிகமாகி அக்னி மந்தமாகவும் தூக்கம் கெடவும் இவை அதிகமாகப் பயன்படும். துவர்ப்பும் கசப்பும் உமிழ்நீர்ப் பெருக்கத்தைக் குறைப்பதுபோல வயிற்றிலும் கெடுதி விளைவிப்பவையே. அதனாலேயே காபி குடிப்பதைத் தடுக்க முடியாதவர்களைக்கூட "வெறும் வயிற்றில் காபி குடிக்காதே. ஏதாவது வேறு உணவு ஏற்றுக்கொண்ட பிறகே காபியைக் குடி" என்று உபதேசிப்பார்கள் சில அனுபவமுள்ள வைத்யர்கள். இதன் துவர்ப்பைக் குறித்து வாதம் அதிகமாவதைத் தடுக்க சர்க்கரையும் பாலும் உதவலாமே என்று சிலர் கேட்பர். சர்க்கரையும் பாலும் அதிகமானால் கபத்தால் அக்னி மந்தமும் சேரும் என்றொரு விளக்கம்தான் இதற்குத் தரமுடியும். பெரும்பாலும் காபியும் டீயும் எருமைப் பாலில் தயாராகுபவையே எருமைப்பால் அக்னி மந்தத்தை அதிகமாக்கும் என்பதும் வெளிப்படை. ஆகவே அக்னி மந்தமுள்ளவர்கள் காபியையும் டீயையும் நிறுத்துவதுதான் நல்லது. காலையில் வெறும் வயிற்றில் அவைகளை சாப்பிடுவது மிகக் கெடுதல்.

காபிக்கு அடுத்தபடி புகையிலையும் பாக்கும் இந்த வரிசையில் இடம் பெறுபவை.

சோதன சிகித்ஸை: மாதம் ஒரு முறையோ இரண்டு மாதங்களுக்கொரு முறையோ பேதிக்குச் சாப்பிடுவது என்றொரு பழக்கமிருந்து வந்தது. இதனால் குடலில் பழைய மலம் கழிக்கப்பட்டு குடலும் ஈரல்களும் சுறுசுறுப்புடன் இயங்கமுடியும். இந்த முறையை குறிப்பிட்ட கெடுக்களில் தொடர்ந்து கையாண்டுவர நோய்களே ஏற்படாது. அக்னியும் மந்தமாகாது. ஆனால் இந்த மாதிரி சோதன சிகித்ஸை எடுத்துக்கொண்ட உடனேயே கடினமான உணவுகளை ஏற்றுக்கொள்வதும் அக்னி மந்தத்தை விளைவிக்கின்றது. பேதிக்குச் சாப்பிட்ட தினத்தில் குடலும் இரைப்பையும் சற்றுக் களைப்படைந்திருக்கும். அன்றும் அதைத் தொடர்ந்து 2, 3 நாட்களும் லகுவான உணவு கொள்பவனுக்கு அக்னி களைப்பு நீங்கி வலுப்பட்டுவிடும். ஆனால் அன்றே ஒருவித கட்டுப்பாடுமின்றி சாப்பிடுபவனுக்குச் சிறு தீயின்மேல் விறகுப் பொதியைப் போடுவதுபோல கடும் உணவு அக்னி மந்தத்தை உண்டாக்கிவிடுகிறது. இவ்விதமே உடல் நலம் குன்றி துர்ப்பலமான நிலையில் கிரமமாக உணவுகளை ஏற்பது அவசியமாகின்றது.

அக்னி மாந்தியத்தில் மருந்து உணவுப் பொருள்கள்: இஞ்சி. அக்னி மந்தமாவதென்றாலே கபத்தின் இயற்கைக் குணமான மந்தம் தன் சக்தி மிகுந்து நிற்பது புலனாகிறது. அதனால் அக்னி மந்தத்தில் நிதானத்தைத் தவிர்க்கும் கொள்கையை யொட்டி கபத்தைக் குறைத்து அக்னி மந்தத்தைப்போக்கும் உணவு வகைகளைக் கூட்டுவது அவசியமாகிறது. இஞ்சியும் உப்பும் அல்லது இஞ்சியும் காடியும், அல்லது இஞ்சியும் புளி உப்புக் கூட்டும் சேர்த்து உணவு ஏற்குமுன் சாப்பிடுவது எப்போதும் பத்தியம். இஞ்சியிலுள்ள காரம் இதற்குப் பெரிதும் உதவுகின்றது.

மிளகு: காரமுள்ள வெற்றிலையினுள் மூன்று மிளகு வைத்து மடித்து மென்று காலை வெறும் வயிற்றில் சாப்பிடுவது வழக்கம். இதை ஒரு வாரம் சாப்பிட்டு மேலும் தேவையாயின் நடுவில் ஒரு வாரம் நிறுத்திப் பின் தொடர்ந்து சாப்பிடுவது உண்டு. குடலிலுள்ள வாயுக்கட்டு குறையும். தொண்டை முதலிய இடங்களில் சதை அடைப்பு குறையும். ஜீர்ணமாகும்.

இஞ்சியோ மிளகோ எல்லா தேகவாகு உள்ளவர்களுக்கும் ஒத்துக்கொள்ளும் என்று கூறுவதிற்கில்லை. கப தேகவாகுள்ளவர்களுக்கு இரண்டுமே ஒத்துக்கொள்ளும். வாயு பிரகிருதி உள்ளவர்களுக்கு முதலில் அக்னி மந்தம் நீங்கி அக்னியும் பித்தமுமதிகமாகி, கொழுப்பு குறைந்து உடல் வரட்சியும் சூடும் குடல் வேக்காடும் மலக்கட்டும் ஏற்படும். பித்தப் பிரகிருதி

உள்ளவர்களுக்கு வாய்ப்புண், குடல் வேக்காடு, முதலியவை அதிகமாகும். அவ்விதமே துவந்துவ—திரிதோஷ ப்ரகிருதிக்கு இஞ்சியும் சுக்கும் தனித்து நன்மை தருவதில்லை. பித்தப் பிரகிருதிகளுக்கு இனிப்பும் கசப்பும் உள்ளவையும் வாத ப்ரகிருதிகளுக்கு உப்பும் புளிப்பும் கலந்த நெய்ப்பு உள்ள பொருள்களும் தான் பயன்படும். வாத ப்ரகிருதிகளுக்கு காலையில் வெறும் வயிற்றில் இந்துப்பு அல்லது கடல் உப்பை நெய் சேர்த்துச் சாப்பிடச் செய்வது நல்லது. கபப் பிரகிருதி சிறுது வாதமும் கலந்து உள்ளவர்களுக்கு, மிளகாயே நல்ல குணம் தருகிறது. ஆகவே எங்கும் பிரகிருதியைக் கவனிக்காமல் சிகித்ஸை செய்ய முடிவதில்லை. அதிலும் த்வந்த்வப் பிரகிருதிகளுக்கும் திரிதோஷ ப்ரகிருதிகளுக்கும் சிகித்ஸை செய்யும் போதும் நிதான பர்வர்ஜனமோ சிகித்ஸா யுக்தியோ சிறிது கடினமே.

வாந்தியை நிறுத்தும் சில மருந்துகளும் உணவுகளும்

பொதுவாக வாந்தி ஆமாசயத்தில் ஏற்படும் குழப்பம் (உத்க்லேசம்) காரணமாக ஏற்படுகின்றது, இதற்கு தோஷங்களில் வாயு முக்கிய நிதானமாக இருந்தால் லங்கனம் கூடாது. மற்ற இரு தோஷங்களால் ஏற்பட்டவைகளில் லங்கனம் நல்லது. வாதஜ வாந்தியில் லங்கனத்தால் வாயு மேலும் அதிகமாகலாம். சில சமயம் வாயுவிற்கு அஜீர்ணமான உணவு - கபம் முதலியவைகளால் ஆவரணம் ஏற்பட்டிருந்து வாந்தி வந்தால், அங்கு லங்கனம் உதவும். லங்கனத்திற்கு அடுத்தபடி சோதனம் அவசியமாகிறது. பொதுவாக லங்கனத்தாலேயே சுகம் கிடைக்கும் எனினும், தோஷம் நிறைய இருக்கும்போது சோதனம் அவசியமாகிறது. தோஷம் மீதியிருக்கும் நிலையில் வாந்தி கட்டுப்பட்டால் வேறு பலத்த நோய்களுக்கு அதுவே காரணமாகும்.

முதலில் வாந்தியுள்ளவனுக்கு உமட்டல் - மேல் வயிற்றுக் குழப்பம் அடங்குவதற்கான சிகித்ஸை அவசியமாகிறது. அத்துடன் எந்த உணவையும் ஸ்பூனுகச் சிறிதளவில் தான் சாப்பிடச் செய்ய வேண்டும்.

உணவு வகையில் பொரிக் கஞ்சி முதலிடம் பெறுகிறது. யாதவஜீயின் ஸித்தயோக ஸங்கிரஹத்தில் கொடுத்துள்ள பொரிக் கஞ்சி முறை மிகவும் ஏற்றது. நெல்பொரி 1 தோலா, ஏலரிசி 4–5 அரிசிகள், கிராம்பு 2–4, ஜலம் 8 அவுன்ஸ், இதை நல்ல கொதி வரும் வரை அடுப்பில் வைத்துக்காய்ச்சி சர்க்கரை $\frac{1}{4}$–$\frac{1}{2}$ தோலா அளவு சேர்த்து ஆறியதும் வடிகட்டிக் கொள்ளவும். 1–2 ஸ்பூன் சிறிது சிறிதாகச் சாப்பிட்டுவர நல்லது, வாந்தியில் கசப்பும் துவர்ப்பும் உணரப்பட்டு வாந்தி எடுத்த திரவம் மஞ்சள் நிறத்துடனோ, பச்சை நிறத்துடனோ காணப் பட்டால், அதில் சிறிதளவு எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்துச் சாப் பிடலாம். உமட்டல், விக்கல், நாவரட்சி எல்லாவற்றையும் தடுக்கும்.

தித்திப்பு மாதுளை, கரும்பு, ஆப்பிள் இம்மூன்றும் வாந்தியைச் சமப்படுத்துபவை. மண்ணிற்கு வாந்தியை நிறுத்தும் குணம் உண்டு. ஓட்டுச்சில்லை அடுப்பில் காய்ச்சித் தண்ணீரில் துவைத்து அந்தத் தண்ணீரை ஆற வைத்துச் சாப்பிட உமட்டல் நிற்கும். இந்தத் தண்ணீரைக் குளிர வைத்து ஐஸ் சேர்த்துக்கூட சாப்பிடு வது நல்லது.

அரசம் பட்டையை அடுப்பிலிட்டுச் சுட்டுச் சிவந்த நிறத்தில் இருக்கும்போது அப்படியே ஜலத்தில் துவைத்தெடுத்துத் தெளிந்த ஜலத்தைச் சாப்பிடுவதும் உண்டு. அரசம்பட்டையைச் சாம்பலாக்கி அதைக் கரைத்துத் தெளிந்த ஜலத்தைச் சாப்பிடு வதும் உண்டு. விக்கல், நாவரட்சி முதலியவைகளையும் இது தணிக்கும்.

எலுமிச்சம்பழத்தைச் சிறிய துண்டுகளாக்கி அதில் இந்துப்பு அல்லது கடல் உப்பு, டீகாமலி கோந்து, ஜீரகம் இவைகள் தூள் செய்து போட்டுச் சுடவைத்துச் சுவைத்துச் சாப்பிடச் செய்வதும் உண்டு. டீகாமலி சேர்க்காமலும் இதை உபயோகிப்பர். ஜம்பீர பானகம், மாதுலங்க பானகம், தாடிம பானகம் பித்த வாந்தியில் நல்லவை. எலுமிச்சம்பழத் தோலை உலர்த்தி மடக்கிவிட்டு மூடி சீலை செய்து பஸ்மமாக்கி 2–4 டெஸிக்ராம் அளவு தேனில் சாப்பிட நல்லது. வாந்தியுடன் பேதியும் ஆனால் எலுமிச்சம்பழம் உப்பு கலந்த மருந்துகளை யோசித்துத்தான் தரவேணும்,

பூலாங்கிழங்கு — சூர்ணம் செய்து தனித்துக் கொடுக்கவும். வேறு நோயின் உபத்திரவமாக வாந்தி வரும்போது அம்லபித்தம், சூலம் முதலிய நோய்களில் பூலாங்கிழங்குத் தூளுடன் சங்கபஸ்மம் சோழி பஸ்மம், சுக்தி பஸ்மம் முதலியவைகளுடன் சேர்த்துக்

கொடுக்கலாம். இதன் சூர்ணம் வேளைக்கு 2-3 டெஸீக்ராம்அளவு தேன் — சந்தனுத்யர்க்கம் முதலியவைகளுடன் கொடுக்கலாம். இதையே சந்தனுத்யர்க்கம் விட்டு 3-4 மணி நேரம் அரைத்து 3–4 டெஸீகிராம் அளவு மாத்திரையாக்கிக்கொண்டு அதை சுவைத்துச் சாப்பிடுமாறு யாதவஜீ ஸித்தயோக ஸங்கிரஹத்தில் கொடுத்துள்ளார். சர்த்திரிபு என்றே இதற்குப் பெயர் அத்துடன் மயிலிறகு பஸ்மம் ஜஹரமோஹராபிஷ்டீ இந்த இரண்டையும் சேர்த்து சந்தனுத்யர்க்கம் அல்லது பொதினு அர்க்கம் சேர்த்துச் சாப்பிடலாம்.

சந்தனுத்யர்க்கமும் தனித்து வாந்தியிலும் உமட்டலிலும் நல்லதே. சந்தனத்தூள், ரோஜாப்பூ, தாழம்பூ, பேத்முச்க் (வாஸனையுள்ள வஞ்சிப்பூ) தாமரைப்பூ இவைகளை 8 பங்கு ஜலத்தில் போட்டு அர்க்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். பேத்முச்க் கிடைக்காவிடில் மகிழம்பூ சேர்த்துக்கொள்ளலாம். பூலாங்கிழங்குத் தூளும் மாத்திரையும் சந்தனுத்யர்க்கமும் கர்ப்பிணிக்கேற்படும் வாந்தியையும் சமனப்படுத்தும்.

மயிலிறகின் கரி (பர்ஹ பஸ்மம்) வாந்தியிலும் விக்கலிலும் சுவாஸத்திலும் எடுத்தது. மயில்தோகையில் கண்ணுள்ள பகுதியே இதற்கு நல்லது. இதைச் சிறிய துண்டுகளாக்கிச் சட்டியிலிட்டுமூடி கரி அடுப்பில் ½ மணி நேரம் எரித்தெடுக்கக் கரியாகி விடும், வீட்டில் சிறிய அளவில் தயார்செய்பவர்கள் நெய் விளக்கில் கொளுத்திக் கரியாக்கிக்கொள்வர். திப்பிலியின் சூர்ணம் சேர்த்தோ சேர்க்காமலோ இதைத் தேனில் குழைத்துச் சாப்பிடலாம்.

பருத்தி விதையை நன்கு இடித்து எடுத்த மஞ்சள் நிறத்தூள், ஏலரிசி, திப்பிலி, நெல் பொரித்தூள் இவைகளின் சூர்ணத்தை சர்க்கரை சேர்த்துக் கொடுப்பது வாந்தியை நிறுத்த நல்லது. சாம்பிராணிப் பதங்கம் (ஆஸிட்பென்ஸாயிக் 2-8 டெஸிகிராம் அளவு), பேரேலத்தின் கஷாயம், சுருமாவை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து பயறளவில் செய்த மாத்திரை, இலந்தை விதையின் சூர்ணம் இவைகளையும் வாந்தியுள்ள நிலையில் கொடுக்கலாம்.

வாந்தியிருக்கும்போது மேல் வயிற்றின் மேல் கடுகை அரைத்துப் பத்துப் போடுவது உண்டு. 10-15 நிமிஷ நேரம் தான் இந்தப் பத்தை வைத்துக்கொள்ளலாம். சிறுவர்களுக்கு இது மிகவும் நல்லது.

மருந்துகளிலே ஸூதசேகர ரஸம், ரஸாதி சூர்ணம், ரஸாதி வடீ, ஏலாதி சூர்ணம், இவைகள் பிரஸித்தமானவை.

ஸுதசேகர ரஸம் : ரஸம், கந்தகம், தங்கபஸ்மம், வெள்ளி பஸ்பம், பொரித்த வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஊமத்தை விதை, தாம்பரபஸ்மம், லவங்கப்பட்டை, ஏலரிசி, லவங்கப்பத்திரி சிறுநாகப்பூ, சங்க பஸ்மம், வில்வப் பழச் சதை, பூலாங்கிழங்கு. இவை சம அளவு சேர்த்து கரிசலாங்கண்ணிச் சாற்றில் 21 நாள் அரைத்து 2 டெஸிகிராம் அளவில் மாத்திரை செய்து கொள்ளவும். தேனுடன் அல்லது நெய்யுடனும், மாதுளைப்பழச் சர்பத்துடனும் பொரிக்கஞ்சியுடனும் கொடுக்கலாம். தங்கபஸ்மம் சேர்க்காமலும் இதைப் பல ஸ்தாபனங்கள் தயாரிக்கின்றன. யாதவஜீயின் சித்தயோக சங்கிரகத்திலுள்ள முறை இது, வெள்ளி பஸ்மமும் சேர்க்காமலும் கருசலாங்கண்ணிச் சாற்றில் ஒரு நாள் அரைத்தும் இதைத் தயாரிப்பதுண்டு. அம்ல பித்தம், தலை சுற்றல், வயிற்று வலி, தொண்டை எரிச்சல் இவைகளிலும் நல்லது.

ரஸாதி சூர்ணம். யோகரத்னாகரத்திலுள்ளது, ரஸம், கந்தகம், பச்சைக் கர்ப்பூரம், இலந்தைப்பழக்கொட்டை கிராம்பு, கோரைக் கிழங்கு, கவுளா, பொரி, வெண்சந்தனம், திப்பிலி, லவங்கப்பட்டை ஏலரிசி, லவங்கப் பத்திரி, இவைகளைச் சம எடை எடுத்து சந்த னுத்யர்க்கத்தில் அரைத்துச் சூர்ணமாக்கிக் கொள்ளவும். 2-6 டெஸிகிராம் அளவு சாப்பிட வாந்தி, விக்கல், ஆம்லபித்தம் இவை களில் நல்லது.

ரஸாதி வடி. யோகரத்னாகரத்திலுள்ளது. ரஸம், கந்தகம், பச்சைக் கர்ப்பூரம், வெண் சந்தனம், ஜடாமாஞ்சி, வெட்டி வேர் கோரைக்கிழங்கு, விலாமிச்சை வேர், சந்தநாத்யர்க்கத்திலரைத்து மாத்திரை செய்துகொள்ள வேணும். இத்துடன் முற்றிய தேங் காய் கொப்பரையையும் (கமண்டலுவிற்கு எடுக்கக் கூடிய தேங்கா யுடையது நல்லது) ஏலரிசியையும் சேர்த்துத் தயாரிக்க மேலும் நல்லதென்கிறார் யாதவஜீ.

ரஸாதிவடியுடன் கர்பூர சிலாஜத் பஸ்மம், ஜஹரமோஹரா பிஷ்டி மூன்றையும் 1-4-1 என்ற அளவில் சேர்த்து 1 கிராம் வரை கொடுக்க நல்லது. இத்துடன் பூலாங்கிழங்கையும் சேர்ப்பது நல்லது.

ஏலாதி சூர்ணம். ஏலரிசி, கிராம்பு, சிறுநாகப்பூ, இலந்தைக் கொட்டை, பொரி, கவுளா, பச்சைக் கர்பூரம், சந்தனம், திப்பிலி இவைகளின் சூர்ணம் சம அளவு சர்க்கரை கலந்தது 1-3 கிராம் வரை தேனில் குழைத்துச் சிறிது சிறிதாக நக்கிச் சுவைத்துச் சாப்பிடவும்.

———

குப்த யோகங்கள்

3. பலஸார ரஸாயனம் : கடுக்காய்த் தோல் 15 கிராம், இந்துப்பு 30 கிராம், ஏலக்காய் 45 கிராம், தாளீசபத்திரி 60 கிராம், சிறுநாகப்பூ 75 கிராம், மிளகு 90 கிராம், திப்பிலி 105 கிராம், சுக்கு 120 கிராம். இவைகளை இடித்து பெருந் தூளாக்கிக் கொள்ளவும். கரும்புச் சாறு, கசப்பு நார்த்தங்காய்ச் சாறு, எலுமிச்சைச் சாறு, சாத்துக்குடிப்பழச் சாறு, இஞ்சிச் சாறு இவை வகைக்கு 1600 மிலி லிட்டர். மொத்தம் 8 லிட்டர். இதில் சர்க்கரை 8 கிலோ. முன்சொன்ன தூள் எல்லாவற்றையும் போட்டு ஒரு நாள் வைத்திருந்து இளந்தீயில் அவசரமில்லாமல் காய்ச்சிக் கெட்டியான தேன் பதம் வருமளவில் பானகமாகக் காய்ச்சிக் கொள்ளவும். நன்கு கலக்கி வடிகட்டி புட்டிகளில் நிரப்பிக் கொள்ளவும் 1 – 2 டீ ஸ்பூன் அளவு தினம் 3 – 4 வேளை சாப்பிட நல்ல பசி, ஜீரண சக்தி ஏற்படும். அயர்வு நீங்கும்.

4. வாஸா பானகம் : ஆடாதோடை வேரும் இலையும், சித்தரத்தை, கண்டங்கத்திரி, தூதுவளை வகைக்கு 150 கிராம், கிராம்பு, ஏலம், லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, தக்கோலம், சுக்கு, மிளகு, திப்பிலி, விளாமிச்சைவேர் இவை வகைக்கு 30 கிராம். இவைகளை பத்து லிட்டர் ஜலத்தில் இரண்டு லிட்டர் ஜலம் மீதமாகக் காய்ச்சி வடிகட்டி, சர்க்கரை 1 கிலோ, தேன் $\frac{1}{2}$ கிலோ சேர்த்துக் காய்ச்சி தேன் பதம் வந்தவுடன் ஆறவைத்துக் கொள்ளவும். பச்சைக் கற்பூரம் 10 கிராம், நவச்சாரம் 50 கிராம் அரைத்து அதில் கலக்கி பாட்டிலில் வைக்கவும். 2 — 4 ஸ்பூன் அளவு தினம் 2 — 3 வேளை சாப்பிட நாட்பட்ட சளி, இருமல், விலா வலி, முதுகு வலி நீங்கும்.

5. திருவிருதாஸவம் : செவதை வேர் 400 கிராம், கொடிவேலி வேர்ப்பட்டை, குத்துமுடக்கத்தான், பரங்கிப்பட்டை, சூரத்து திலாவாரை, பேய்கும்மட்டி, முக்கொழிஞ்சி (6) வகைக்கு 150 கிராம். முருங்கைப்படை, சுக்கு, சித்தரத்தை, வெள்ளைக்-காவேளை, மூக்கரட்டை (5) வகைக்கு 75 கிராம், தசமூலம் (10) வகைக்கு 30 கிராம், வேப்பம்பட்டை 25 கிராம். இவைகளை இடித்து 64 லிட்டர் ஜலத்தில் 16 லிட்டராகக் கஷாயமாக்கி வடிகட்டி அதில் வெல்லம் 5 கிலோ, தேன் 2 கிலோ, காட்டகத்திப் பூ 200 கிராம், சித்தரத்தை, சீந்திற் கொடி, சிறுகாஞ்சூரி வேர், சிறுதேக்கு, வாய் விளங்கம், வசம்பு, பர்படகம், ஓமம், சிற்ருமணக்கு வேர், மருதோன்றி, கோரைக்கிழங்கு, குராசாணி ஓமம், வட்டத்திருப்பி,

தேவதாரு, கர்கடசிங்கி, சுக்கு, சித்தாமுட்டிவேர், மருள் வேர், கடுகரோகிணி, மஞ்சிட்டி, அதிவிடயம், பூலாங்கிழங்கு, திப்பிலி, யவச்சாரம், செஞ்சந்தனம், பரங்கிப்பட்டை, கொடிவேலி வேர்ப் பட்டை, வெட்பாலையரிசி, ஸர்ஜக்ஷாரம், இந்துப்பு, உப்பு, கந்தக வெடியுப்பு, தேத்தவரங்கொட்டை வகைக்கு 15 கிராம். இவை களைச் சேர்த்துக்கொள்ளவும். ஆஸவம் நன்கு தயாரானபின் சர்க்கரை 2 கிலோ கலந்து 10 நாள் வைத்திருந்து பிறகு உப யோகிக்கவும். ½ — 1 அவுன்ஸ் தினம் இரவு படுக்கும்போது சாப்பிட மலபந்தம் விலகும். தோல் நோய், வாத நோய், கல்லீரல் நோய், பாண்டு முதலிய நோய்களில் மலக்கட்டு, குடல் வாயு, சிறுநீர்த்தேக்கம் ஏற்பட்டுள்ளபோது இது பெரிதும் உதவும். தினம் 1 — 3 தடவை வரை சாப்பிடலாம்.

6. லசுனுதிபானகம் : கடுக்காய்த் தோல் 150 கிராம், யானைத் திப்பிலி, யானை நெருஞ்சில், சுக்கு, கோரைக்கிழங்கு, தேவதாரு, வாய் விளங்கம், சிறுபூளை, தூதுவளை, செவதை வேர், ஓமம், மிளகு, கொடிவேலி வேர்ப்பட்டை இவை (12) வகைக்கு 15 கிராம் இவைகளை 5 லிட்டர் ஜலத்தில் 1 லிட்டர் மீதமாக கஷாயமாக்கி கொள்ளவும். இந்த கஷாயத்தில் உள்ளிப்பூண்டின் சாறு 2500 மிலி லிட்டர், இஞ்சிச் சாறு 600 மிலி லிட்டர் சேர்த்து 4 கிலோ சர்க்கரை சேர்த்து தேன் பதம் வரும்வரை காய்ச்சி, வடிகட்டி, சூட்டுடனிருக்கும்போதே இந்துப்பு, உப்பு, சோடா உப்பு, கந்தக வெடியுப்பு, யவக்ஷாரம், நவச்சாரம் இவை வகைக்கு 15 கிராம் கலந்துகொள்ளவும். வாயுக்கட்டு, நீர்க்கட்டு, மலக்கட்டு இவை களைப் போக்க நல்லது. மூட்டுகளில் ஏற்படும் பிடிப்பையும், குத்து வலியையும், வீக்கத்தையும போக்கும். மலக்கட்டு அதிகமாக உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்காக இதில் சுத்தி செய்த நேர்வளம் 15 கிராம் நன்கு அரைத்துக் கலக்கிக்கொள்வது வழக்கம். ஆனால் இதை நன்கு கலக்கி பாட்டிலில் நிரப்புவதும், குலுக்கிக் குலுக்கி நன்கு கலந்த பிறகே உபயோகிப்பதும் அவசியம்.

புற்றுநோய்

(தொடர்ச்சி)

வைத்ய விசாரத, ஆயுர்வேத சிரோமணி
V. S. பஞ்சநத சர்மா, திருச்சி.

இவ்விதமாக நவீன ஆங்கில வைத்திய சாஸ்திரங்களில் பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து அறிந்துகொண்ட இந்நோயோ (Cancer) இதன் குறிகளோ, சிகிச்சையோ, "ப்ராச்சீன ஆயுர்வேத சாஸ்திரத்தில் இல்லை. ஏனெனில் அது ஆராய்ச்சி செய்யப்படாதது. ப்ரத்தியக்ஷமான கண்டுபிடிப்போ, கண்டு பிடித்தவர்களோ அந்த சாஸ்திரங்களில் குறிப்பிடவில்லை" என சிலரின் வாதம்.

ஆராய்ச்சி என்பது நான்கு விதம். ப்ரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், சாப்தம் என்பன.

ப்ரத்தியக்ஷம் : (புலப்படக்காணும் காட்சியறிவு) இந்திரியார்த் தங்களின் சம்பந்தத்தால் உண்டாகும் ஞானம், இந்திரியம்:- கண் முதலியன. அர்த்தம் !— கண் முதலியவைகளுக்கு புலப்படும் பொருள்கள்.

அனுமானம் : யூகத்தைக் குறிக்கும். நம்முடைய வீட்டில் சமய லறையில் அடிக்கடி நெருப்பும் புகையும் சேர்ந்தே இருப்பதைக் காண்கிறோம். மலைப்பாங்கான ஓர் இடத்திற்கு நாம் போகும் போது தொலைவிலுள்ள மலையில் ஓர் இடத்தில் புகை வருவதைப் பார்க்கிறோம். உடன் பன்முறை வீட்டில் புகையும் நெருப்பும் சேர்ந்தே இருந்து பார்த்த அனுபவத்தால் இம்மலையிலும் புகை தென்படுவதால் நிச்சயம் நெருப்பு இருந்தாக வேண்டும் என்று யூகிக்கிறோம். இது அனுமானம்.

உபமானம். உபமிதிக்குக் காரணம். உபமிதி பெயருக்கும், பொருளுக்கும் உள்ள சம்பந்தத்தின் ஞானம். அதற்குக் காரணம், சாதிருச்ய ஞானம். சாதிருச்யம் என்றால் ஒரு பொருளின் உருவம் குணம், முதலியவைகளின் ஒற்றுமையால் மற்ற பொரு ளைத் தெரிந்துகொள்வது. கவயத்தை (காட்டுப் பசுவை) பார்த் தேன் என ஒருவன் சொல்லும்பொழுது மற்றொருவன் கவயம் என்றால் என்ன? என்று அதன் பொருள் தெரியாமல் கேட்கிறான் அப்பொழுது கவயம் என்பது நம் வீடுகளில் தினம் பார்க்கப்படும் பசு மாடுவைப்போல் இருக்கும் என்று சொல்ல உடன் பசு மாட்

டின் உருவம், நிறம், முதலியவைகளின் ஒற்றுமையை கவயத்தில் பார்த்து தெரிந்துகொள்கிறுன். இதுதான் உபமானம்;

சாப்தம் : ஆப்த்தன் வாக்கியம் சப்தப் ப்ரமாணம். ஆப்த்தன் என்பது உண்மை உரைப்போர். வாக்கியம்—பதங்களின் கூட்டம். பதம் சக்தியை (ஆற்றல்) உடையது. சத்தி என்பது இப்பதத்தின் நின்றும் இப்பொருள் அறியத்தக்கது என்று ஈஸ்வரனுடைய குறிப்பேயாம். பொருள்களின் நினைவிற்கு அனுகூலமான பதத்திற்கு அர்த்தத்தோடு உள்ள தொடர்பு சக்தியாம்.

வைதிகம் : இறைவன் வாய்மொழியாதலால் எல்லாம் ப்ரமாணமே. லௌகிகமோ உண்மை உரைப்பவனுல் சொல்லப் பட்டதால் ப்ரமாணம் ஆகும். இவையல்லாத மற்ற எல்லாம் ப்ரமாணம் ஆகாது.

இவ்விதமாக ஆராய்ச்சி பிரிக்கப்பட்டுள்ளது. ஆனுல் சரக ஸம்ஹிதையில்

த்வி விதமேவ கலு ஸர்வம் ஸச்சாஸச்ச, தஸ்ய

சதுர்விதா பரீக்ஷா ஆப்தோபதேச, ப்ரத்யக்ஷம், அனுமானம் யுக்திஸ்சேதி

ச. ஸூ. அ. 11 : ஸ்லோகம் 17)

என்று குறிப்பிட்டு உள்ளதால் யுக்தி என்பது அதிகப்படியான பிரமாணமாகத் தெரியப்படுகிறது. நல்ல தண்ணீர், ஏர் உழுதல், நல்ல விதை, நல்ல பருவம் எல்லாம் சேர்ந்தால் தான் நல்ல பயிர் விளையும். இவ்வாறு யூகிப்பது யுக்திக்குப் பொருளாகும்.

இந்த ப்ரமாணத்தையும் இரண்டாவதான அனுமான ப்ரமாணத்திலேயே அடக்கி விடுவதால் சிலர் புறக்கணித்து விட்டனர். உபமானப் பிரமாணத்தையும் சரக ஸம்ஹிதையில் குறிப்பிடாமல் இல்லை;

" அத ஔபம்யம் - ஔபம்யம் நாம யதன்யேன அன்யஸ்ய
ஸாத்ருச்யமதிக்ருத்ய ப்ரகாசனம் ।
யதா தண்டேன தண்டகஸ்ய தனுஷா தனுஸ்தம் பஸ்ய,
இஷ்வாஸேன ஆரோக்ய தஸ்ய இதி ॥ ச.வி.அ. :8ஸ்லோகம் 42

ஆக முன் குறிப்பிட்ட பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், சாப்தம் என நான்கு ப்ரமாணங்களும் சரகாசார்யருக்கும் சம்மதம் எனத் தெரிகிறது.

" ஏஷா பரீக்ஷா நாஸ்தி அந்யா யயா சஞ்வம் பரீக்ஷ்யதே "

ச.ஸூ.அ. 11 : ஸ்லோகம் 26

என்ற சரகர் வாக்குப்படி இந்நான்கும் தான் ஆராய்ச்சி. இதைத் தவிர வேறு ஆராய்ச்சி இல்லை எனத் தெரியவருகிறது. ஆனல் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தை தான் முதன்மையாகக் கருதுகின்றனர். காரணம் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் இன்றி மற்ற ப்ரமாணங்கள் உண்டாகாது. மற்ற ப்ரமாணங்களுக்கு அடிப்படையான ப்ரத்யக்ஷம் மட்டும் இருந்தால் போதும் என்பது சிலரின் கூற்று. ஆனல் கீழ்க்காணும் சரகரின் வாக்கியத்தைக் காணும்போது ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு அவ்வளவு முதன்மை கொடுக்க வேண்டிய அவசியமில்லை என தெரிகிறது.

''ப்ரத்தியக்ஷம் ஹ்யல்பம் அனல்பம் அப்பரத்தியக்ஷம்
அஸ்தி, யதாஆகம அனுமான யுக்திபி :
உபலப்யதே யைரேவ தாவத் இந்திரியை : ப்ரத்தியக்ஷம்
உபலப்யதே தான்யேவ ஸந்திசா ப்ரத்யக்ஷாணி ''

சசூ அ 11 : ஸ்லோகம் 7

ப்ரத்யக்ஷம் சிறிதளவுதான். ப்ரத்யக்ஷத்திற்கு புறம்பான ஆப்தாகம (சப்த ப்ரமாணம்) அனுமான யுக்திகளால் தெரிந்து கொள்ளக்கூடிய எவ்வளவோ விஷயங்கள் மிகுதியாய் இருக்கின்றன.

''ஸதாம்ச ரூபாணும் அதிஸந்நிகர்ஷாத் ;
அதிவிப்ரகர்ஷாத் ; ஆவரணுத், கரண தௌர்பல்யாத்,
மனே அனவஸ்,தாணுத், ஸமாணுபிஹாராத் ;
அபிபவாத் ; அதிஸௌக்ஷ்ம்யாச்ச ப்ரத்யக்ஷானுபவத்பி : ll

தன் கண்களில் போட்டுக் கொண்டுள்ள மையை (அஞ்சனம்) தன் கண்களால் பார்க்க முடியவில்லை ஆகாயத்தில் மிகத் தொலைவில் சென்றுகொண்டுள்ள ஒரு புருவை நம் கண்களால் பார்க்க முடியவில்லை. ஒரு சுவற்றின் பின்புறமுள்ள ஒரு இடத்தை நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. காமாலை, Catract போன்ற நோய்களில் கண்களின் பார்க்கும் சக்தி குறைவதால் எதையும் தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஒரு விஷயத்தில் மனத்தை ஊன்றி கவனித்துக்கொண்டிருக்கும்போது அருகில் மற்றவர்கள் இருப்பதோ, பேசுவதோ புலப்படவில்லை, நம் கையில் இருந்த நெல்லிக்காயை, நெல்லிக்காய் நிறைந்த கூடையில் போட்டு விட்டால் முதலில் நம் கையிலிருந்து போட்ட அதே நெல்லிக் காயை எடுக்க இயலவில்லை. பல நாள் இரவுகளில் நட்சத் திரங்கள் ஒளிப்பிழம்பாக தரையை நோக்கிப் பாய்வதைப் பார்க்கிரும். ஆனல் பகலில் பார்க்க இயலவில்லை. சூட்சம இயந்திரங்களின் உதவியாலும், நம் கண்களுக்குப் புலப்படாத எவ்வளவோ கிருமிகள் உள்ளன. உதாரணமாக புற்று

நோய்க்குக் காரணமான "வைரஸ்" கிருமிகளையே எடுத்துக் கொள்ளலாம். இவற்றின் விஷயத்தில் "ப்ரத்தியக்ஷ" ப்ரமாணத்தைக் கைவிட்டு அனுமானத்தைத் தான் கடைபிடிக்க வேண்டி வந்தது மேல்நாட்டு விஞ்ஞானிகளால். ஆக ப்ரத்யக்ஷ ப்ரமாணம் மட்டும் முக்கியமில்லை என்று முடிவாகிறது. "ஆப்த் தோபதேச: ப்ரத்திக்ஷ அனுமான யுக்திஸ் சேதி" என்ற வரிசைப்படி [ஆப்த்தோபதேசத்தை சப்தப்ரமாணம்] முதன்மையாகக் கருதுகிறார் சரகாசாரியார். அதற்கான காரணத்தையும் குறிப்பிடுகிறார்.

ரஜஸ்தமோப்யாம் நிர்முக்தா: தபோஞானபலேன யே
யேஷாம் த்ரிகா லமமலம் ஞானமவ்யாஹதம் ஸதா
ஆப்தா சிஷ்டா விபுத்தாஸ்தே தேஷாம் வாக்யம ஸம்சயம்
ஸத்யம் வக்ஷயந்தி தே கஸ்மாத் அஸத்யம் நீரஜஸ்தமா:

தபஸ் [கடும் உபாசனை] ஞானம் (பிரம்ம ஞானம்) இவைகளால் ராக – த்வேஷ – லோப – மோக – மதம்மாத்சர்ய – ஆகிய ஆறு கெட்ட வர்க்கங்களை வென்றவர்களாயும் கடந்த காலம், நடக்கும் காலம், வரும் காலம் முதலியவற்றைத் தெரிந்தவர்களாகவும் உள்ள முனிவர்கள், யோகிகள் ஆப்த்தர்கள். அவர்கள் வாயிலிருந்து எந்த சமயத்திலும் அறியாமலும் பொய்மை வர இடம் இல்லை. அவர்கள் வாக்கியம் தான் ஆப்த்தோபதேசம். இந்த ஆப்த்தோபதேசத்தைத் தான் சப்தப்ரமாணம் என்று குறிப்பிடுவது இத்தன்மையிதான ஆப்தோப தேசங்களைக்கொண்டது தான் ஆயுர்வேத சாஸ்திரம். இதில் ஆப்தர்கள் என்பவர்கள் பரத்வாஜர், சரகர், சுச்ருதர், காசியபர், பேடர் முதலிய தபோதனர்கள் தான். ஆராய்ச்சியில் மேன்மையான இக்காலத்திய ஆராய்சிகளையும் கடந்துள்ள சரகர் போன்றோரின் உபதேசங்களைக்கொண்ட ஆயுர்வேதசாஸ்திரங்களில் புற்றுநோயைப்பற்றிக் (cancer) குறிப்பிடவில்லையே என்பது மற்றொரு கேள்வி. இந் நோயைப்பற்றி குறிப்பிடவில்லை தான். குறிப்பிடவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் நோய்கள் எல்லாம் வருவதற்கும் போவதற்கும் வராமல் தடுப்பதற்கும் உள்ள குறைகளையும், காரணங்களையும், குறிப்பிட்டு இருப்பது கவனிக்கவேண்டும். வாயு, பித்தம், கபம் இம்மூன்றின் சமநிலை ஏற்றத்தாழ்வுகள் [கேடுறும் நிலை] ஆரோக்கியத்திற்கும், வியாதிகளுக்கும் காரணம், வாயு, பித்தம், கபம் இம் மூன்றினுள் அசையாதனவைகளான பித்தம், கபம், இரண்டையும் அசையவைத்து பரவச் செய்வது வாயு.

(தொடரும்)

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

Impcops

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள் : 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஜோத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினுல்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஒளஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.